மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி 65-வது விதியின்படி என்கொயரி நடந்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணம் வசூலிப்பதுடன், கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆழ்துளை கிணறுகள் வெட்டக்கடன்.

வினா எண் 656—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் விவசாயத்திற்கென விவசாயிகளுக்கு போர்வெல் போடுவதற்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் ஏதுமில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் ஏதுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலையில் அந்தப் பகுதி கடுமையான வறட்சியாலும், பஞ்சத்தாலும் பதிக்கப்பட்டு இருக்கிறது. ஜனங்கள் அத்தனைபேரும் வெளியே சென்று கொண்டிருக்கிறார்கள் அந்தச் சூழ்நிலையில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலையில், அந்தப் பகுதியில் போர்வெல் போட்டு, அதன் மூலமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கு குடிநீரும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிணறுகளைத் தோண்டுதல், இருக்கின்ற கிணறுகளை ஆழப் படுத்துதல், விசையேற்றுதல் போன்ற பணிகளுக்கு தாராளமாக நிதி உதவி தந்து, அப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துளைக் கிணறுகளைப் பொறுத்தவரை சற்று பிரச்சினை இருக்கிறது.

1981 ஏப்ரல் 6]

அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 35 அடிக்கு மேல் துளைக் கிணறு போட்டு தண்ணீர் எடுக்கும்போது, உப்புத் தண்ணீர்தான் வருகிறது என்ற காரணத்தினால், அது விவசாயத்திற்கு உதவியாக இராது. அந்தக் காரணத்தினால் துளைக் கிணறு போடும் வேலை மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் சில பகுதிகளில் வாங்கிய கடனையே திருப்பித் கொடுக்காத நிலை; கிட்டத்தட்ட 97 சதவீதம் நிலுவை இருப்பதன் காரணமாக, ரிசர்வ் வங்கியின் வரையறையை மீறிவிட்ட காரணத்தினால் மீண்டும் கடன் கொடுக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆனாலும் வறட்சிப் பகுதி என்பதற்காக, இதையெல்லாம் தளர்த்தி அரசே அட்வான்ஸ் கொடுத்து கிணறுகளைத் தோண்டுவதற்கு உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நேற்றல்ல; கிழக்கு இராமநாதபுரம் கிட்டத்தட்ட 72 லேஇருந்து தொடர்ச்சியாக இயற்கையின் சீற்றதால் பாதிக்கப்பட்டதன் காரணமாக, ஜனங்கள், மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய வங்கிகளும் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கிறது. இன்றை சூழ்நிலையை கணக்கில் கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு லோன் கொடுத்து, உடனடியாக போர் வெல் போடும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்தப் பகுதிகள் முழுமையுமே ஏரியா சர்வே செய்யவேண்டும். நிலத்திற்கு அடியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 30 அடிக்கு கீழே தண்ணீர் எடுத்தால், உப்புத் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், அதற்கும் கீழ 1,000 அடி தோண்டினால், நல்ல தண்ணீர் வருகிறது என்று, பல இடங்களில் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, தற்சமயத்தில் இந்த அடிப்படையில் 1,00 அடிக்கு கீழே தண்ணீர் எடுக்க போர் வெல் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்குக் கடனுதவி தந்து, துளைக் கிணறுகள் போடுவதற்கு

கிரவுண்ட் வாட்டர் செல்லை கூட்டுறவுத் துறை கேட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு கீழே சென்று விட்டால், நல்ல தண்ணீர் கிடைக்கின்றது என்ற ஒரு கருத்து இருக்கின்றது. கிரவுண்ட் வாட்டர் செல் அதை ஆய்ந்து வருகிறது. அந்த ஆய்வின் முடிவின் அடிப்படையிலே, நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பொழுது கடன்களை சற்றுத் தளர்த்தி இருப்பதாக சொல்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுக்கப்பட்டு, கிணறுகள் தோண்டப்பட்டு தண்ணீர் வராத சூழ்நிலை. விவசாயமும் செய்யமுடியவில்லை, கடனையும் திருப்பித் தர முடியவில்லை. ஆகவே இம்மாதிரியான நிலைமையில் உள்ள கடனை ரத்து செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு தோண்ட நிலவள வங்கி மூலம் கடன் பெற்று, கிணறு தோண்டி தண்ணீர் வராமல் இருந்துவிடுமேயானால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல், அதிகப்படியான பணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, அது நடைமுறையில் இருக்கின்றது. வேறு எங்காவது இதுபோன்ற பிரச்சினை இருக்குமானால், அது அரசாங்கத்திற்கு தெரிய வந்தால் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 97 விழுக்காடு இந்தக் கடன்கள் திரும்ப வருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சில நேரங்களில் கடனைப் பெறுவதற்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகுந்த சிரமம் இருக்கிறது. அப்படி சிரமப்பட்டு பெற்றாலும் கடன் முழுமையாக வருவதில்லை. முழுமையாக்ப்

1981 ஏப்ரல் 6]

பெறுகின்ற பணத்தை கிணறு வெட்ட பயன்படுத்துவதில்லை. அப்படி முழுமையாகப் பயன்படுத்தினாலும் தண்ணீர் வருவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அரசே கிணறை வெட்டிக் கொடுத்து தவணை முறையில் விவசாயிகளிடம் பணத்தை அரசு பெற்றுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத் துறையின் கீழ் ட்யூப்வெல் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பினை நிறுவி, அதன் மூலம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளின் இன்னல்களைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கழிவுப் பஞ்சுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி.

*வினா எண். 657—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள 150-க்கு மேற்பட்ட வேஸ்ட் காட்டன் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: *(அ)-(இ)* தமிழகத்தில் உள்ள வேஸ்ட் காட்டன் மில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 5-4-1969 முதல் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்ச ஊதிய விகிதத்தை திருத்தி அமைப்பதற்காக அரசுக்கு ஆலோசனை வழங்க 1977ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. கழிவுப் பஞ்சுத்